மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

80—

முதியோர் இல்லம்

***22855—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியில் ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லம் மற்றும் முதியோர் இல்லம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-10

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) 5-9-2012 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதியோர், குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களைத் தன்னுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்தார்கள். அப்படித் தொடங்கி வைத்த திட்டத்தின் அடிப்படையில், வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில், 'சரணாலயம், கருணை இல்லம்' என்ற தொண்டு நிறுவனத்தின்மூலம் ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்பட்டு, 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்களைப் பயனாளிகளாகக் கொண்டு, தற்போது இந்த இல்லம் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

[2014 பிப்ரவரி 19

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முப்படையின் வீரத்தை தனக்கே கொண்ட 'அம்மா' எனும் மூன்றெழுத்து மந்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலலையே! தமிழர் வாழ்வுக்கு வாரி வழங்கும் வான்மழையே! சங்கத் தமிழ் மொழியே! தங்கத் தாரகையே! சங்கே முழங்கு எனும் சரித்திரம் படைக்கின்ற தாயே! இறை தந்த கொடையே! புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டையே! பார் வியக்கும் நாளைய பாராளுமன்றமே! நாளைய தமிழ் பிரதமரே! (மேசையைத் தட்டும் ஒலி) திராவிடத்தின் திருவிளக்கே! தமிழர்களின் குலவிளக்கே! புழுதிபட எதிரிப்படை ஓட, ஓடவென களம் காணும் எங்கள் புரட்சித் தாயே! மணிமேகலையின் மற்றுமொரு தோன்றலாய் அம்மா உணவகம் தந்த ஆருயிர் தாயே! வரியில்லா வாழ்வு தந்த தாயே! தமிழே! தென்பொதிகைச் சாரலே! புது வரிகள் தொடுக்காமல், தமிழர் வாழ்வுக்கு நெருக்கடிகள் கொடுக்காமல், தமிழர் இல்லங்கள், இதயங்கள் கரும்பாய் இனித்திட நிதிநிலை தந்த தாயே! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கிப் பணிவோடு வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில், ஆதரவற்ற அனாதை சிறுவர் இல்லம் மற்றும் முதியோர் சரணாலயம், கருணை இல்லம் கடந்த 17 ஆண்டுகளாக தனிநபர் மூலமாக பொதுமக்களின் உதவியோடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இதில் 53 முதியோர்களும், 67 சிறுவர்களும் தங்கி, பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த இரண்டு இல்லங்களும் அரசு புறம்போக்கு நிலத்தில் இரண்டு சிறிய கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லத்திற்கு அரசு அனுமதியும் வழங்கியுள்ளது. மேற்கண்ட இல்லத்தின்மேல் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கருணைப் பார்வை பட்டதனால், சமூக நலத் துறைமூலம் சிறந்த சேவைக்கான விருதும் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் வாணியம்பாடியில் சிறப்பாகச் செயல்பட்டுவரும் ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லத்திற்கு அரசுக் கட்டடம் தந்து, அரசு உதவியோடு சிறப்பாகச் செயல்படுத்திட முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

2014 பிப்ரவரி 19]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு சொந்தமான கட்டடத்தை ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு வழங்குவது அரசினுடைய வழக்கத்தில் இல்லை. அவர்களே வங்கியின்மூலமாகக் கடனைப் பெற்றுக்கூட கட்டடத்தைக் கட்டிக் கொள்ளலாம். இது தனியார் நடத்தக்கூடிய தொண்டு நிறுவனம். வங்கியின்மூலம் கடனைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்வதற்கு, அனுமதி தருவதற்கு, அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***36277—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம் புதூரில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம் புதூரில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*